# SHANJU's

## Your Exam Partner

# தமிழ்நாட்டின் வரலாறு,பண்பாடு,மரபு மற்றும் சமூக அரசியல் இயக்கங்கள்

**TNPSC தொகுதி - I, II, IIA, IV மற்றும்**

**TNUSRB தேர்வுகளுக்காக**

முழுமையானது | தேர்வு நோக்குடையது | எளிதில் கற்கக்கூடியது

# <u>பொருளடக்கம்</u>


| தலைப்பு | பக்க எண் |
|---|---|
| தமிழ் சமூதாய வரலாறு | **1** |
| தொல்பொருள் கண்டுபிடிப்புகள் | **19** |
| விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்ககாலப் போராட்டங்கள் | **39** |
| விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு | **151** |
| பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டின் சமூக அரசியல் இயக்கங்களின் பரிணாம வளர்ச்சி | **170** |
| நீதிக் கட்சி பகுத்தறிவு வாதத்தின் வளர்ச்சி | **190** |
| சுயமரியாதை இயக்கம் | **202** |
| தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணாவின் பங்களிப்புகள் | **209** |
| சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான தமிழ் இலக்கியம் | **222** |
| திருக்குறள் | **264** |

SHANJU's
Your Exam Partner

- பெரும்பாலும் வெள்ளியில் செய்யப்பட்ட அவற்றில் குறியீடுகள் முத்திரைகளாகப் பொறிக்கப்பட்டிருந்தன.

**தமிழ்நாட்டில் இருந்து செங்கடல் கரைக்கு:**

- எகிப்தின் **பெர்னிகே துறைமுகத்தில்** ஏழரை கிலோ மிளகு இருந்த இந்தியப் பானையும், தேக்கு மரப்பலகைத் துண்டுகளும், தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த பானை ஓடு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டன.
- பெர்னிகே துறைமுக பகுதிக்கு வடக்கே **குசேர் அல் காதும்** எனும் துறைமுகத்தில் தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த மூன்று சுடுமண் துண்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

**நம்பிக்கைகளும் வழிபாட்டுமுறைகளும்:**

- சங்க காலத்தில் **ஆவி வழிபாடு, மூதாதையர் வழிபாடு, வீரர்கள் வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு** போன்றவை இருந்தன.
- ஐந்திணைகளுக்கும் உரிய வழிபாட்டு கடவுள்கள் பற்றி **தொல்காப்பியர்** சுட்டிக்காட்டுகிறார்.
- இயற்கைக்கு மீறிய **'அணங்கு'** குறித்துச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

**நுண்கலைகள்:**

- சங்க காலத்தில் பலவகையான கலைகளும் செழித்திருந்தன.
- செய்யுள் இயற்றுதல், இசைக்கருவிகள் இசைத்தல், நடனமாடுதல் ஆகியவற்றை பலரும் அறிந்திருந்தனர்.
- சங்க கால உணவு முறைகள் குறித்தும் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.
- மகளிர் தம் கண்களுக்கு மை தீட்டுவதற்குச் செம்பினால் ஆன மெல்லிய குச்சிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவை பல அகழாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
  - சமயச் சடங்குகளின் போது நிகழ்த்தப்படும் ஒரு வகை ஆட்டத்திற்கு **'வெறியாட்டம்'** என்று பெயர்.

**தொல்பொருள் கண்டுபிடிப்புகள்**

**அறிமுகம்**

- **'தொல்லியல்' (Archaeology)** என்ற சொல், **'பண்டைய'** என்று பொருள்படும் '**Archaios**' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானது.

**வரலாற்றுக்கு முந்தைய காலங்கள்**

| **காலம்** | **காலவரம்பு** | **முக்கிய அம்சங்கள்** |
|---|---|---|
| **பழங்கற்காலம்** | 20 லட்சம் ஆண்டுகள் – கி.மு. 8000 வரை | வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் |
| **இடைகற்காலம்** | கி.மு. 8000 – கி.மு. 1300 வரை | நுண்கருவிகளின் பயன்பாடு |
| **புதியகற்காலம்** | கி.மு. 2000 – கி.மு. 1000 வரை | விலங்குகளைப் பழக்குதல், (மற்றும்) வேளாண்மை |

| | | |
|---|---|---|
| **இரும்புக்காலம் (பெருங்கற்காலம்)** | கி.மு. 1300 – கி.மு. 300 வரை | பெருங்கற்கால ஈமச் சடங்கு முறை, கைவினை **திறன்களில் சிறப்பு** நிபுணர்கள் உருவாதல் |
| **சங்ககாலம்** | கி.மு. 300 – கி.பி. 300 வரை | சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் வளர்ச்சி, கடல்வழி வணிகம், இலக்கிய மரபு |

**இந்தியத் தொல்லியல்துறை**

- **1861** ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- **அலெக்ஸாண்டர் கன்னிங்ஷாம்** என்பவர் தொடங்கினார்.

**பழங்கற்காலம்**

**மேல்பழங்கற்காலம்**

- **1862** ஆம் ஆண்டு **பல்லாவரம்** பகுதியில் **ராபர்ட் புரூஸ் பூட் (Robert Bruce Foote)** தொல்லியல் சான்றுகளைக் கண்டறிந்தார்.
- **நதி :** கொசஸ்தலையாறு
- **மாவட்டம் :** திருவள்ளூர்

**மேல்பழங்கற்காலத்தில் பயன்படுத்திய சுடுவிகள் கிடைத்த பகுதிகள்**

1. அதிரம்பாக்கம்
2. குடியம் குகைகள்
   - மனித மூதாதையர்களான **ஹோமோ இரக்டஸ் (Homo erectus)** வசித்த மிக முக்கியமான இடங்கள் இவை.
   - இங்கு கண்டெடுக்கப்பட்ட **கைக்கோடாரிகள் "சென்னை கற்கருவி தொழிலகம்"** என அழைக்கப்படுகின்றன.

**கீழ்பழங்கற்காலம்**

- இந்த காலத்து கருவிகள் **மரத்தாலும், எலும்பாலும்** உருவாக்கப்பட்டன.

**கீழ்பழங்கற்காலம் கருவிகள் கிடைத்த பகுதிகள்**

1. வட ஆர்காடு
2. தர்மபுரி
3. அதிரம்பாக்கம்
4. வடமதுரை

**இடைபழங்கற்காலம்**

- இக்கருவிகள் அளவில் சிறியவையாக இருக்கும்.

**இடைபழங்கற்காலம் கருவிகள் கிடைத்த தளங்கள்**

1. புதுப்பட்டி
2. சீரக்கோட்டை
3. தஞ்சாவூர்
4. அரியலூர்

**இடைகற்காலம்**

**இடைகற்காலம் கருவிகள் கிடைத்த (தொல்லியல் தளம்) தளங்கள்**

- சென்னை
- வடஆர்காடு
- தர்மபுரி
- சேலம்
- கோயம்புத்தூர்
- அரியலூர்
- புதுக்கோட்டை
- மதுரை
- சிவகங்கை
- திருநெல்வேலி
- கன்னியாகுமரி

- தூத்துக்குடி அருகே உள்ள **"தேரி"** பகுதியில் இடைகற்கால கருவிகள் கிடைத்துள்ளன.

- **தேரி** → சிவப்பு மணற்குன்றுகள்.
- **செர்ட் மற்றும் குவார்ட்ஸ் (பளிங்கு) போன்ற கற்கள் / கனிமங்கள்** பயன்படுத்தப்பட்டன.

**புதியகற்காலம்**

- **ராகி (கேழ்வரகு), கொள்ளு, பச்சைப்பயிறு** போன்றவை பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் (எச்சங்கள்) கிடைத்துள்ளன.

**தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்கள்**

- வேலூர் மாவட்டம் – **பையம்பள்ளி**
- தர்மபுரி

**இரும்புக்காலம் (பெருங்கற்காலம்) (Megalithic Age)**

- மக்கள் இரும்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர்.
- இது நல்ல பண்பாட்டு வளர்ச்சி உருவான காலகட்டம்.
- இக்காலத்தில்தான் சங்க காலத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

**பயன்படுத்திய பொருட்கள்**

- சூதுபவள மணி
- தங்கம்
- வெண்கலம்
- இரும்பு
- குவார்ட்ஸ் (பளிங்கு)

**முக்கிய தொல்லியல் தளங்கள்**

| **வரிசை** | **தொல்லியல் தளம்** |
|---|---|
| 1 | ஆதிச்சநல்லூர் (தூத்துக்குடி) |
| 2 | சானூர் (மதுராந்தகம்) |
| 3 | சித்தன்னவாசல் (புதுக்கோட்டை) |
| 4 | பொருந்தல்(திண்டுக்கல் மாவட்டம்) |

**பெருங்கற்கால ஈமச் சின்ன வகைகள்**

**1. கற்திட்டைகள் (Dolmens)**

- இறந்தவர்களைப் புதைக்கும் இடத்தில் இருபுறமும் இரண்டு கற்பலகைகள் செங்குத்தாக நடப்பட்டு, அவற்றின் மீது ஒரு கற்பலகை வைக்கப்படும்.

**கற்திட்டைகள் கிடைத்த இடங்கள்**

| **இடம்** | **மாவட்டம்** |
|---|---|
| வீர ராகவ புரம் | காஞ்சிபுரம் |
| கும்மாள மருது பட்டி | திண்டுக்கல் |
| நரசிங்கம்பட்டி | மதுரை |

**2. கல்லறை (Cist)**

- நான்கு புறமும் நான்கு கற்பலகைகளை நிறுத்தி, அவற்றின் மேலே ஒரு கற்பலகை மூடி வைக்கப்படும்.

**கல்லறை கிடைத்த இடம்**

- கொடுமணல் (ஈரோடு)

**3. முதுமக்கள் தாழிகள் (Urns)**

- மட்பாண்ட ஜாடிகளில் இறந்தவர்களைப் புதைப்பது.

**கிடைத்த இடம்.**

- ஆதிச்சநல்லூர்

**4. சார்க்கோ பேகஸ் (Sarcophagus)**

- சுட்ட களிமண்ணால் செய்யப்பட்ட ஈமத் தொட்டிகள்.

**5. நெடுங்கல் / குத்துக்கல் (Menhir)**

- புதைத்த நினைவு சின்னம் போல நிறுவப்படும் தூண் போன்ற நடுகற்கள்.

**6. நடுகற்கள் (Hero Stones)**

**கிடைத்த இடங்கள்**

- புளிமான்கோம்பை
- பொற்பனைக்கோட்டை

**தமிழ்நாடு தொல்லியல் துறையின் நோக்கங்கள்**

**1961** ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தமிழ்நாடு தொல்லியல் துறை கீழ்க்கண்டவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

- **தெலுங்கானூர், மங்காடு, கீழணாமண்டி, மயிலாடும்பாறை, ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை** ஆகிய இடங்களில் சேகரிக்கப்பட்ட கரிம மற்றும் மட்பாண்ட மாதிரிகளுக்கான தொடர்ச்சியான **AMS-14C** மற்றும் **OSL** அறிவியல் காலக்கணிப்பு முடிவுகள் (*கி.மு.* 2171, 2427, 2450, 2459, 2522, 2953, 3259 *மற்றும்* 3345) கிடைக்கப்பெற்றுள்ளன.
- **ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை** அகழ்வாராய்ச்சிகளில் சேகரிக்கப்பட்ட நெல் மற்றும் பிற சிறுதானியங்கள், தமிழர்கள் **3500 ஆண்டுகளுக்கு முன்பே** நன்செய் மற்றும் புன்செய் விவசாய முறைகளை அறிந்திருந்ததை நிரூபித்துள்ளன.
- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள **துலுக்கர்பட்டி** அகழ்வாராய்ச்சியில் மட்டும் சுமார் **5000 குறியீடுகள்** கொண்ட மட்பாண்ட ஓடுகள் கிடைத்துள்ளன. இது இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட மிக அதிக எண்ணிக்கையிலான ஓடுகளில் ஒன்றாகும்.
- தமிழ்நாட்டின் குறியீடுகளில் **60%** குறியீடுகள், சிந்துவெளி முத்திரைகளில் செதுக்கப்பட்ட குறியீடுகளுடன் ஒற்றுமையைக் கொண்டுள்ளன.
- தென்னிந்தியாவின் **இரும்புக்காலமும்**, சிந்துவெளி நாகரிகமும் (*வடஇந்தியாவின் வெண்கல மற்றும் செம்பு காலம்)* சமகாலத்தவை என்பதை சமீபத்திய அகழ்வாராய்ச்சிகள் நிரூபித்துள்ளன.
- தமிழ்நாட்டில் உள்ள வரலாற்று நினைவுச்சின்னங்களைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும் தமிழ்நாடு அரசு **"தமிழ்நாடு பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் வரலாற்று மற்றும் தொல்லியல் இடங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம், 1966 (தமிழ்நாடு சட்டம் 25, 1966) மற்றும் 1971-ஆம் ஆண்டு விதிகள்"** ஆகியவற்றை இயற்றியுள்ளது.

**2024-ஆம் ஆண்டிற்கான தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகள்**

**2024-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட எட்டு முக்கிய அகழ்வாராய்ச்சிகள் விவரங்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன:**

| **வ. எண்** | **இடம்** | **மாவட்டம்** | **கட்டம்** |
|---|---|---|---|
| 1 | கீழடி மற்றும் கொந்தகை | சிவகங்கை | 10-ஆம் கட்டம் |
| 2 | வெம்பக்கோட்டை | விருதுநகர் | 3-ஆம் கட்டம் |
| 3 | கீழணாமண்டி | திருவண்ணாமலை | 2-ஆம் கட்டம் |
| 4 | பொற்பனைக்கோட்டை | புதுக்கோட்டை | 2-ஆம் கட்டம் |
| 5 | திருமலைபுரம் | புதுக்கோட்டை | 1-ஆம் கட்டம் |

SHANJU's
Your Exam Partner

| | | | |
|---|---|---|---|
| 6 | சென்னனூர் | கிருஷ்ணகிரி | 1-ஆம் கட்டம் |
| 7 | கொங்கணகரம் | திருப்பூர் | 1-ஆம் கட்டம் |
| 8 | மருங்கூர் | கடலூர் | 1-ஆம் கட்டம் |

**தமிழகத்தின் முக்கிய அகழாய்வுத் தளங்கள்**
**1. ஆதிச்சநல்லூர் (தூத்துக்குடி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தூத்துக்குடி |
| நதி | தாமிரபரணி ஆறு |
| காலம் | கி.மு. 9-ஆம் நூற்றாண்டு (பெருங்கற்காலம்) |
| சிறப்பு | சங்ககாலத்திற்கு முற்பட்ட நாகரிகம் |

**அகழ்வாராய்ச்சி வரலாறு**

- **1876** – ஆண்ட்ரு ஜாகர் (Andrew Jagor) மற்றும் ஸ்டூவர்ட் – முதல் அகழ்வாராய்ச்சி.
- **1885** – அலெக்சாண்டர் ரீ (Alexander Rea) இரண்டாவது அகழ்வாராய்ச்சியைத் தொடங்கினார்.
- **1902–1903** – அகழ்வாராய்ச்சி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.
- **2003** – இந்தியத் தொல்லியல் துறை மீண்டும் **கடைசி** அகழ்வாராய்ச்சி மேற்கொண்டது.

**இந்திய தொல்லியல் துறை நடத்திய கடைசி அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்கள்**

1. முதுமக்கள் தாழிகள் (10 முழுமை)
2. மையக் கருத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
3. செம்பு வளையல்கள்
4. வெண்கலப் பொம்மைகள்
5. கறுப்பு – சிவப்பு நிறப் பானைகள்

- இவை அனைத்தும் ஒரு மேம்பட்ட நகர நாகரிகம் இருந்ததை வெளிப்படுத்துகின்றன.
- கிடைத்த பொருட்களில் அனைத்தும் ஜெர்மனியின் **பெர்லின் அருங்காட்சியகத்தில்** பாதுகாக்கப்பட்டுள்ளன.

**ஆதிச்சநல்லூரின் சிறப்புகள்**

- **தமிழ் நாகரிகத்தின் தொட்டில்** என்று அழைக்கப்படுகிறது.
- காலம் : **இரும்புக்காலம்**
- **பொருநை அருங்காட்சியகம்** – ரெட்டியார்பட்டி (திருநெல்வேலி)
- ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- இங்கு குயவர்களின் குடியிருப்புகள் இருந்துள்ளன.

**ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம்**

- தொல்லியல் தளத்திலேயே நிறுவப்பட்ட **முதல் தொல்பொருள் அருங்காட்சியகம்**.

**கிடைத்த பொருட்கள்**

- செம்புச் சிலைகள்
- தங்கக் காதணிகள்

SHANJU's
Your Exam Partner

- தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள்
- **ஓட்டு ஓவியம்**
  - கையில் நெற்கற்றையுடன் உயரமான பெண்
  - அருகில் கொக்கு மற்றும் மான் **இருப்ப**து போன்ற **ஓவியம்**
- டெர்ரகோட்டா உருளை வடிவக் குழாய்கள்
  - மேம்பட்ட நீர் மேலாண்மை **முறையின் இருப்பை காட்டுகிறது**
- **5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரம்** கண்டறியப்பட்டுள்ளது.

**2. அரிக்கமேடு (புதுச்சேரி)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| இடம் | புதுச்சேரி |
| அகழாய்வு | 1944 |
| காலம் | கி.மு. 300 – கி.பி. 300 (சங்ககாலம்) |
| ஆட்சி | சோழர்கள் |

**அகழ்வாராய்ச்சியாளர்கள்**

- மார்டிமர் வீலர்
- ஜே. எம். கசால்
- ஏ. கோஷ்
- கிருஷ்ணதேவா
- ஏ. கோஷ் மற்றும் கிருஷ்ணதேவா இந்தியத் தொல்லியலாளர்கள்.

**கிடைத்த பொருட்கள்**

- பழமையான துறைமுகம்
- ரோமானிய நாணயங்கள்
- ரோமானிய பானை ஓடுகள்
- வட்ட கிணறுகள்
- பொது/தெரு ஏரிகள்
- கிடங்குகள்
- ஆம்போரா ஜாடிகள் (from Romans)

இது இந்தியர்கள் ரோமானியர்களும் வணிகம் செய்ததை குறிக்கிறது**.**

- உலகின் அனைத்து மணிமாலை உற்பத்தி மையங்களின் தாய்.
- ரோமப் பேரரசர் **அகஸ்டஸ்** காலத்தில் கி.மு. 30 இருநாட்டு வணிகம் உச்சத்தை எட்டியது.
- **ஹண்டிங்கடன் மேற்கொண்ட அகழாய்வுகள் (**1944, 1949**) தமிழ்நாட்டிலிருந்து துணி, கண்ணாடி, வளையல்கள் மற்றும் கிளிஞ்சல் ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது தெரிய வருகிறது**.
- **அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்கள் அகஸ்டஸ் காலத்தில் வெளியிடப்பட்டன**.

**3. பையம்பள்ளி (வேலூர் - திருப்பத்தூர்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| அகழாய்வு ஆண்டு | 1964 |
| அகழ்வாராய்ச்சியாளர் | எஸ். ஆர். ராவ் |
| காலம் | கி.மு. 1000 (சங்ககாலத்திற்கு முற்பட்டது) |

**கண்டுபிடிப்புகள்**

- புதிய கற்காலக் கருவிகள்

- வேளாண்மை செய்ததற்கான சான்றுகள்
- ஈமத் தாழிகள்
- புதிய கற்காலப் பண்பாடு
- வழவழப்பாக்கப்பட்ட கற்கருவிகள் பெருமளவில் கிடைத்தன.

**4. கொடுமணல் (ஈரோடு மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| நதி | நொய்யல் ஆறு |
| அகழாய்வு | 1980, 1990, 2012 |
| இலக்கியப் பெயர் | "கொடுமணம்" (பதிற்றுப்பத்து) |
| ஆட்சி | சேரர்கள் (குடநாட்டு சேரர்கள்) |

**ஆட்சியாளர்கள்**

- **குடநாட்டு சேரர்கள்** → பொறையார் வம்சத்தினர் **(தமிழ்நாடு பகுதி ஆட்சி செய்தவர்)**
- **குட்டநாட்டு சேரர்கள்** → கேரளா

**கண்டுபிடிப்புகள்**

1. தமிழ்-பிராமி எழுத்துகளுடன் 300-க்கும் மேற்பட்ட **மற்கல** பொறிப்புகள்
2. எஃகு உருக்கும் தொழிற்சாலை
3. ரோமானிய நாணயங்கள்
4. 169 மி.மீ. நீளமுள்ள இரும்பு வாள்
5. சூது பவள மணிகள்
6. சங்கு வேலைப்பாடுகள்
7. மனித எலும்புகள்
8. நூற்பாலைகள்

**பானைகளில் காணப்பட்ட பெயர்கள்**

- ஆதன்
- இல்குரவர்

இதன் மூலம், அக்கால மக்களுக்கு எழுத்தறிவு இருந்தது தெரியவருகிறது.

- **தொழிற்சாலை பகுதி** கண்டறியப்பட்டது.
- கொடுமணலில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் **நொய்யல் அருங்காட்சியகத்தில்** வைக்கப்பட உள்ளன.

**பெருங்கற்கால வரலாறு**

**மேலும் கிடைத்த பொருட்கள்**

- மோதிர நிலைமட்டி **கண்டுபிடிக்கப்பட்டது.**
- நான்கு கால் கலசங்கள்
- சூதுபவள மணிகளால் செய்யப்பட்ட **782 மணிகள்**
- தாமிரத்தில் செய்யப்பட்ட கண்ணு வடிகட்டி (தாமரை மற்றும் மயில் பொறிப்புகளுடன்)

**5. பொருந்தல் (பழனி, திண்டுக்கல் மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| இடம் | பழனி, திண்டுக்கல் மாவட்டம் |
| அடைமொழி | **"கவி நாட்டு பொருந்தல்"** |

| | |
|---|---|
| காலம் | **கி.மு.** 5 **ஆம் நூற்றாண்டு சேர்ந்தது – சங்ககாலம் தொடங்குவதற்கு முற்பட்ட காலம்** |
| அரசர் | வெள்ளவிக்கோ பெரும்பேகன் |

**கண்டுபிடிப்புகள்**
- கண்ணாடி மணிகள் தொழிலகம்
- செங்கல் சுவர்கள்
- **டெரக்கோட்டா (சுடுகளிமண் பொருள்கள்)**
- யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட பகடைக் காய்கள்
- சூதுபவள மணிகள்
- பெருங்கற்கால புதைவிடம் (**கல்பதுக்கை / கற்பதுக்கை**)
- **"வைரா"** எனப் பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்

நெல் உமி எச்சங்கள் : **2009–2010** ஆம் ஆண்டுகளில் **கே. ராஜன்** அவர்களால் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

**6. பூம்புகார் (சிலப்பதிகாரம் & மணிமேகலை)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | மயிலாடுதுறை |
| சிறப்பு | சோழர்களின் துறைமுக நகரம் |
| நிலை | சங்ககால சோழர்களின் இரண்டாம் தலைநகரம் |

**கண்டுபிடிப்புகள்**
- செங்கல் சுவர்கள்
- பௌத்த மடாலயத்தின் அடித்தளம்
- அருங்காட்சியகம்

**அகழாய்வு நடைபெற்ற / நடைபெறும் இடங்கள்**
1. **கிழார்வேலி (பூம்புகார்)**
2. **தர்மக்குளம்**

**1996–1997** ஆம் ஆண்டுகளில், கோவா தேசிய கடலாராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து ஆழ்கடல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த சான்றுகள் கண்டறியப்பட்டன.
- கிழார்வேலியில் 20 செ.மீ. அகலமுள்ள சுவர் கண்டறியப்பட்டது.
- பனமரம் மற்றும் இலுப்பை மரத்தால் செய்யப்பட்ட தூண்கள் கண்டறியப்பட்டன.

**7. கீழடி (சிவகங்கை மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | சிவகங்கை |
| நதி | வைகை |
| பழைய பெயர் | குந்திதேவி சதுர்வேதி மங்கலம் / பெருமணலூர் |
| **கீழடி தொகுப்பு:** | **பள்ளி சந்தை திடல், கொந்தகை, மணலூர், அகரம் போன்ற இடங்களில் அகழாய்வு நடந்தது** |
| காலம் | கி.மு. 580 – கி.பி. 500 |
| **திட்டம்** : | **2013- முதலில் அகழாய்வு செய்ய** |

# UNIT VI

**முதலாம் அகழ்வாராய்ச்சி கட்டங்கள்**

- **முதல் மூன்று கட்ட அகழாய்வுகள் இந்திய தொல்லியல் துறையால் நடத்தப்பட்டது (ASI).**
- **முதல் மற்றும் இரண்டாம் கட்ட அகழாய்வு → அமர்நாத் இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.**

| **கட்டம்** | **ஆண்டு** | **விவரம்** |
|---|---|---|
| திட்டம் | 2013 | அகழ்வாராய்ச்சி திட்டமிடப்பட்டது |
| 1-ஆம் கட்டம் | 2015 | ASI |
| 2-ஆம் கட்டம் | 2016 | அமர்நாத் இராமகிருஷ்ணன் |
| 3-ஆம் கட்டம் | 2017 | ரமணன் |
| 4–9 கட்டங்கள் | - | தமிழ்நாடு தொல்லியல் துறை (சிவானந்தம் R.) |

**கிடைத்த பொருள்களை அனுப்பி வைத்த இடங்கள்:**

| **பொருள்** | **ஆய்வு நிறுவனம்** |
|---|---|
| புதைப்படிவங்கள் (Fossils) | Beta Analytic Center, Florida (USA) |
| பானை ஓடுகள் | Pisa University, Italy |
| எலும்புக்கூடுகள் (Skeleton) | தக்கான் பல்கலைக்கழகம் (புனே), மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் |

**கீழடியில் கண்டுபிடிக்கப்பட்டவை**

- சுட்ட செங்கற்களால் செய்யப்பட்ட கட்டிடங்கள்
- முதுமக்கள் தாழிகள்
- வட்ட கிணறுகள்
- உலைகள் (Furnases)
- சூதுபவள மணிகள்
- சதுரங்கக் காய்கள்
- பகடைகள் (Dices)
- சுடுமண் சிற்பங்கள் (Terracotta Figurines)
- தங்க ஆபரணங்கள்
- நெல் உமி பொறிக்கப்பட்ட முத்திரைகள் (Seals with rice Husks)
- தமிழ்-பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 72 பானை ஓடுகள்

**பானை ஓடுகளின் பொறிக்கப்பட்ட பெயர்கள்:**

- ஆதன்
- திஈசன்
- உதிரன்

**கொந்தகை – சிவகங்கை (கீழடியின் ஒரு பகுதி)**

- **இது ஒரு புதை நகரம்**.
- ஆறாம் கட்ட அகழ்வாராய்ச்சி இங்கிருந்து தொடங்கப்பட்டது.

**கண்டுபிடிப்புகள்**

- 17 மனித எலும்புக்கூடுகள்
- 6 குழந்தைகளின் எலும்புக்கூடுகள்
- 2 விலங்குகளின் எலும்புகள்
- கீழடி அருங்காட்சியகம் கொந்தகை பகுதியில் அமைந்துள்ளது.

- **தமிழ் மக்கள் 6-ஆம் நூற்றாண்டிலிருந்தே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதை கூறும் தமிழ்-பிராமி பொறிப்புகள் உள்ளன.**

**கண்டுபிடிப்புகள்**

- உடைந்த சங்கு வளையல்கள்
- 70-க்கும் மேற்பட்ட விலங்குகளின் எச்சங்கள்

**8. சிவகளை (தூத்துக்குடி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தூத்துக்குடி |
| நதி | தாமிரபரணி ஆறு |
| காலம் | கி.மு. 1155 |
| அகழ்வாராய்ச்சி | தமிழ்நாடு தொல்லியல் துறை |

**அகழ்வாராய்ச்சி ஆண்டுகள்**

- **2019–20**
- **2020–21**
- **2021–22**

**கண்டுபிடிப்புகள்**

- கருப்பு–சிவப்பு பானைகள்
- **"ஆதன்"** எனப் பெயர் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
- பெருங்கற்காலச் சான்றுகள்
- பொருளை அருங்காட்சியகத்தில் கண்டு எடுக்கப்பட்ட பொருள்கள் உள்ளன
- உமி நீக்கப்பட்ட அரிசி கண்டுபிடிக்கப்பட்டது; இது சுமார் 3,200 ஆண்டுகளுக்கு முன்பே நெல் பயிரிடப்பட்டு பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.

**9. மயிலாடும்பாறை (கிருஷ்ணகிரி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | கிருஷ்ணகிரி |
| அகழாய்வு | 1980, 2003, |
| காலம் | புதியகற்காலம் (Neolithic Age) |

**கண்டுபிடிப்புகள்**

- 4200 ஆண்டுகளுக்கு முன்பே இரும்பு **பயன்பாடு இருந்தது என்பதை அறிய முடிகிறது**
- 70 செ.மீ. நீளமுள்ள இரும்பு வாள்
- தமிழகத்தின் முக்கிய மலைத் தொல்லியல் தளம்

**சானரப்பன் மலையில் கண்டுபிடிக்கப்பட்டவை**

- ஈமச் சின்னங்கள்
- பெருங்கற்காலத்தைச் சேர்ந்த 4 பானைகள்
- **2020-21 & 2021-22 → அகழ்வாராய்ச்சி நடந்த ஆண்டு.**

**10. வேம்பக்கோட்டை – விஜயகரிசல் குளம் (விருதுநகர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | விருதுநகர் |
| அகழாய்வு தொடக்கம் | 2022 |

| | |
|---|---|
| காலம் | கி.மு. 4000 – கி.மு. 3000 |

**கண்டுபிடிப்புகள்**

- செம்பு நாணயங்கள்
- சங்கு வளையல்கள்
- சுடுகளிமண் பொருட்கள்
- புகைபிடிப்பான்

**அகழ்வாராய்ச்சி தொடங்கிய ஆண்டு – 2017**

**கண்டுபிடிப்புகள்**

- உருண்டை பீங்கான் மணிகள்
- சுடுமண் முத்திரை
- சுடுமண் விளக்கு
- சுடுமண் பொம்மை

**11. கங்கைகொண்ட சோழபுரம் (ஜெயங்கொண்டம், அரியலூர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | அரியலூர் |
| சிறப்பு | சோழர்களின் இரண்டாம் நிலை தலைநகரம் |
| முக்கிய அகழாய்வு | மாளிகைமேடு |
| முதல் அகழ்வாராய்ச்சி | 1980 |
| காலம் | இடைக்காலம் |

**கண்டுபிடிப்புகள்**

- இரண்டு கோட்டைகள் மற்றும் இரண்டு அரண்மனைகள் இருந்ததற்கான சான்றுகள்
- **1.10 மீட்டர்** தடிமனுள்ள செங்கல் சுவர்கள்
- கிரானைட் கல் தூண்கள்
- விலங்கு எலும்**பினா**ல் செய்யப்பட்ட கருவிகள்
- தந்தத்தினால் செய்யப்பட்ட சிற்பங்கள்
- சங்கு வளையல்கள்
- சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட **செலடான் (Celadon) பானைகள்** மற்றும் பீங்கான் பாத்திரங்கள்

**12. பெரும்பாலை – பொன்னாகரம் (தர்மபுரி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தர்மபுரி |
| அகழாய்வு தொடக்கம் | 2022 |
| காலம் | இரும்புக்காலம் |

- கொங்கு நாட்டின் வடக்கு எல்லையாக **பெரும்பாலை** கருதப்படுகிறது.

**கண்டுபிடிப்புகள்**

- கருப்பு பானை ஓடுகள்
- சிவப்பு பானை ஓடுகள்
- கருப்பு–சிவப்பு பானை ஓடுகள்

**13. வசவசமுத்திரம் (மாமல்லபுரம் - காஞ்சிபுரம் அருகில்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| இடம் | மாமல்லபுரம் - **காஞ்சிபுரம்** அருகில் |

# UNIT VI

**கண்டுபிடிப்புகள்**
- கூம்பு வடிவ ஜாடி
- ரோமானிய **ஆம்போரா (Amphora)** ஜாடி

கி.பி. 100–200 காலகட்டத்தில் ரோமானியர்களுடன் வணிகத் தொடர்பு **இருந்ததை அறிய முடிகிறது.**

**14. போளுவாம்பட்டி (கோட்டைக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| இடம் | கோட்டைக்காடு, கோயம்புத்தூர் மாவட்டம் |
| காலம் | கி.பி. 700-ஆம் நூற்றாண்டு |

**கண்டுபிடிப்புகள்**
- 50 வண்ணக் கற்களால் செய்யப்பட்ட பெரிய மற்றும் சிறிய மணிகள்
- சுடுமண் காதணிகள்
- சங்கு வளையல்கள்
- இரும்புப் பொருட்கள்
- சுடுமண் முத்திரைகள்
- சேரர் சின்னம் – **வில் மற்றும் அம்பு, மீன் மற்றும் புலி போன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்தது.**
- தமிழ் வட்டெழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்.

**15. அழகன்குளம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | இராமநாதபுரம் |
| நதி | வைகை ஆற்றங்கரை |

**கண்டுபிடிப்புகள்**
- கி.பி. 100 காலகட்டத்தைச் சேர்ந்த **தமிழ்-பிராமி** எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
- மத்திய தரைக்கடல் பகுதியைச் சேர்ந்த **ரௌலட்டட் (Rouletted Ware)** பானை ஓடுகள்
- ரோமானிய நாணயம்
    - முன்புறம் – ரோமானிய பேரரசரின் உருவம்
    - பின்புறம் – வெற்றி தெய்வத்தின் உருவம்
- பேரரசர் **இரண்டாம் வேலண்டினியன் (Valentinian II)** காலத்தில் **கி.பி. 375**-இல் **வெளியிடப்பட்டதாக அறியப்படுகிறது.**
- இங்கு கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் **நாவாய் அருங்காட்சியகம் (இராமநாதபுரம்)** காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- இப்பொருட்கள் பாண்டியர்களின் கப்பற்படை பற்றிய தகவல்களை வெளிப்படுத்துகின்றன.

**16. பொற்பனைக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)**
**அகழ்வாராய்ச்சி**

| **கட்டம்** | **ஆண்டு** |
|---|---|
| முதல் கட்டம் | 2022–23 |
| இரண்டாம் கட்டம் | 2024–25 |

# UNIT VI

**கண்டுபிடிப்புகள்**

- 17 ஏக்கர் பரப்பளவு கொண்ட கோட்டை
- நீர்வழங்கும் கால்வாய்
- எலும்புக் கருவிகள்
- 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வெள்ளி நாணயம்
- கார்னீலியன் மணிகள் (*வடஇந்திய வர்த்தகத் தொடர்பிற்கான சான்று)*
- செப்பு ஆணிகள்
- எலும்பு முனைக் கருவிகள்

**17. கரூர் (கரூர் மாவட்டம்)**

- பண்டைய காலத்தில் முக்கியமான வணிக மையமாக விளங்கியது.

**கண்டுபிடிப்புகள்**

- வடிகாலுடன் கூடிய அமைப்பு (Model of Drainage System)
- கி.பி. 100 காலகட்டத்தைச் சேர்ந்த **தமிழ்-பிராமி** எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்
- ரோமானிய **ஆம்போரா (Amphora)** ஜாடி
- ரோமானிய நாணயங்கள்

**18. பழையாறை (தஞ்சாவூர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தஞ்சாவூர் |
| சிறப்பு | இடைக்காலச் சோழர்களின் இரண்டாம் தலைநகரம் |
| அருகிலுள்ள இடம் | நந்தன்மேடு (**பழையாறை அருகில் உள்ள இடம்**). |

**கண்டுபிடிப்புகள்**

- பெருங்கற்கால தாழிகள்
- கருப்பு–சிவப்பு பானை ஓடுகள்
- பீங்கான் ஓடுகள்
- சங்கு வளையல்கள்
- கண்ணாடி வளையல்கள்
- சுடுமண் காதணிகள்

**19. பேரூர் (கோயம்புத்தூர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | கோயம்புத்தூர் |
| அகழாய்வு தொடக்கம் | 2022 |
| அகழாய்வு பகுதிகள் | கல்லிமேடு, திருநீற்றுமேடு |
| காலம் | கி.பி. 5–6 ஆம் நூற்றாண்டு |

**கண்டுபிடிப்புகள்**

- சுடுமண் முத்திரை
  - வில் மற்றும் அம்பு
  - இருபுறமும் விளக்குகள்
  - மேல்புறத்தில் பிறைநிலவு
- உத்தரப் பிரதேசம் மாநிலம் மதுராவில் கண்டெடுக்கப்பட்டதை ஒத்த சுடுமண் உருவங்கள்

SHANJU's
Your Exam Partner

### 20. துலுக்கார்பட்டி (விளங்காடு) – திருநெல்வேலி மாவட்டம்

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மற்றொரு பெயர் | விளங்காடு |
| மாவட்டம் | திருநெல்வேலி (வள்ளியூர் அருகில்) |
| நதி | **நம்பியாற்றங்கரை** |
| அகழாய்வு தொடக்கம் | 2022 |
| காலம் | இரும்புக்காலம் / சங்ககாலத்திற்கு முற்பட்ட காலம் |

- நம்பியாற்றங்கரையில் வாழ்ந்த இரும்புக்கால மக்களின் வாழ்க்கை முறையை ஆய்வு செய்வதற்காக அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

**கண்டுபிடிப்புகள்**

- கருப்பு–சிவப்பு பானை ஓடுகள்
- சிவப்பு பானை ஓடுகள்
- கருப்பு பானை ஓடுகள்
- வெண்புள்ளிகள் இடப்பட்ட கருப்பு பானைகள்
- வெள்ளி முத்திரை

### 21. மருங்கூர் (கடலூர் மாவட்டம்)

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | கடலூர் |
| அகழ்வாராய்ச்சி | மருங்கூர் |

**கண்டுபிடிப்புகள்**

- இரும்புக் கத்தி
- சங்கு கூடு

### 22. கொற்கை (தூத்துக்குடி மாவட்டம்)

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தூத்துக்குடி |
| நதி | தாமிரபரணி ஆறு |
| அகழாய்வு | 1968–1969 |

**கண்டுபிடிப்புகள்**

- சங்கு வளையல் தொழிலகம்
- வெள்ளி நாணயங்கள்
- செம்பு நாணயம்
- கருப்பு பானை ஓடுகள்
- ரோம் நாட்டின் அரிட்டைன் (Arretine Ware) பானைகள்
- சீன நாட்டின் செலடன் (Celadon Ware) பானைகள்
- கி.மு. 6-ஆம் நூற்றாண்டிற்கு முன்பே இங்கு வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றதை அகழாய்வு உறுதிப்படுத்துகிறது.

SHANJU's
Your Exam Partner

**23. ஆணைமலை (கோயம்புத்தூர் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | கோயம்புத்தூர் |
| அருகிலுள்ள பகுதி | ஆலியார் |
| காலம் | கி.மு. 1000 – கி.பி. 300 |

**கண்டுபிடிப்புகள்**
- கத்திகள்
- கருப்பு–சிவப்பு பானை ஓடுகள்
- பெருங்கற்கால ஈமப் பானைகள் (Megalithic Burial Pots)

**24. பனையகுளம் (தர்மபுரி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | தர்மபுரி |
| காலம் | கி.பி. 300 – 1300 |

**கண்டுபிடிப்புகள்**
- சுடுமண் தொல்பொருட்கள்

**கோவலன் பொட்டல் (மதுரை மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | மதுரை |
| இடம் | பழங்காநத்தம் |

- **சிலப்பதிகாரத்தின்** நாயகன் **கோவலன்** கொலை செய்யப்பட்ட இடமாகக் கருதப்படுகிறது.

**கண்டுபிடிப்புகள்**
- மூன்று முதுமக்கள் தாழிகள்
- ஒரு புறம் மீன் உருவம் பொறிக்கப்பட்ட சதுர வடிவ செப்புக் காசுகள்.

**25. கண்ணனூர் (திருச்சி மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | திருச்சி |
| அருகிலுள்ள பகுதி | சமயபுரம் |
| காலம் | கி.பி. 13–14 ஆம் நூற்றாண்டு |

**கண்டுபிடிப்புகள்**
- சிவப்பு நிற பானை ஓடுகள்
- சீன பானை ஓடுகள்
- சுடுமண் மணிகள்
- கண்ணாடி வளையல்கள்
- இரும்பு ஆணிகள்

**26. படைவேடு / படைவீடு (திருவண்ணாமலை மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| மாவட்டம் | திருவண்ணாமலை |
| பழைய பெயர் | மருதராசர் படைவீடு |

- சோழர் காலச் சிற்றரசர்களான **சம்புவராயர்களின் தலைநகரம்**.

**கண்டுபிடிப்புகள்**

- கி.பி. 14-16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகைப்பான்கள் & சுல்தான் நாணயங்கள், அலங்கரிக்கப்பட்ட சிவப்பு பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

**27. திருத்தங்கல் - சிவகாசி வட்டம் (விருதுநகர் மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| மாவட்டம் | விருதுநகர் |
| வட்டம் | சிவகாசி |
| காலம் | கி.மு. 1000 – கி.பி. 300 |

- **சிலப்பதிகாரத்தில்** முக்கிய வாழ்விடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கண்டுபிடிப்புகள்**

- நுண்கற்கால கருவிகள் (Microlithic Tools)
- சிவப்பு நிற பானை ஓடுகள்
- குறுகிய மற்றும் அகன்ற வாய் கொண்ட பானைகள்

**28. மாங்குடி - சங்கரன்கோவில் வட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| மாவட்டம் | திருநெல்வேலி |
| வட்டம் | சங்கரன்கோவில் |
| அகழாய்வு தொடக்கம் | 2002 |

- **மதுரைக்காஞ்சி** இயற்றிய **மாங்குடி மருதனார்** பிறந்த ஊர்.

**கண்டுபிடிப்புகள்**

- ரோமானிய பானை ஓடுகள்
- கி.மு. 200 காலத்தைச் சேர்ந்த **"குரு மங்கல அதன் இ யானை போ"** என்ற தமிழ்-பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட கருப்பு–சிவப்பு நிற பானை **கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

**29. தலைச்சங்காடு (மயிலாடுதுறை மாவட்டம்)**

| விவரம் | தகவல் |
|---|---|
| மாவட்டம் | மயிலாடுதுறை |
| அகழாய்வு | 2010 |

- இரும்புக்காலம் முதல் இடைச்சங்க காலம் வரை மூன்று காலகட்டங்களை உள்ளடக்கிய தொல்லியல் தளம்.

# UNIT VI

**கண்டுபிடிப்புகள்**

- சுடுமண் விளக்கு
- கூரை ஓடுகள்
- சுடுமண் உறைகிணறு
- சுதைச் சிற்பங்கள்
- பராந்தகச் சோழன் காலக் கோவில் தடயங்கள்.

**30. ஆலம்பறை (காஞ்சிபுரம் மாவட்டம்)**

| **விவரம்** | **தகவல்** |
|---|---|
| மாவட்டம் | காஞ்சிபுரம் |
| காலம் | கி.பி. 17–18 ஆம் நூற்றாண்டு |

**கண்டுபிடிப்புகள்**

- கருங்கல்லினால் ஆன பீரங்கி குண்டுகள்
- போர்சிலின் வகை ஓடுகள் (**Porcelain)**
- சுடுமண் விளக்குகள்
- நாணயங்கள் தயாரிக்கும் சுடுமண் அச்சுகள்.

**தமிழகத்தின் அகழாய்வு தளங்கள்**

- **2024–25** பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட **எட்டு இடங்களில்** அகழ்வாராய்ச்சி பணிகள் தொடங்கப்பட்டன.

**அகழாய்வு நடைபெற்ற தளங்கள்**

| **இடம்** | **மாவட்டம்** | **கட்டம்** |
|---|---|---|
| **கொந்தகை – கீழடி – அகரம்** | சிவகங்கை | ஒன்பதாம் கட்டம் |
| **கங்கைகொண்ட சோழபுரம்** | அரியலூர் | மூன்றாம் கட்டம் |
| **பட்டறை பெரும்புதூர்** | திருவள்ளூர் | மூன்றாம் கட்டம் |
| **வெம்பக்கோட்டை** | விருதுநகர் | இரண்டாம் கட்டம் |
| **துலுக்கர்பட்டி** | திருநெல்வேலி | இரண்டாம் கட்டம் |
| **கீழ்நமண்டி** | திருவண்ணாமலை | முதல் கட்டம் |
| **பூதிநத்தம்** | தர்மபுரி | முதல் கட்டம் |
| **பொற்பனைக்கோட்டை** | புதுக்கோட்டை | முதல் கட்டம் |

**தமிழ்நாட்டிற்கு வெளியே தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சிகள்**

- **தமிழ் கலாச்சாரத்தின் வேர்களை** இந்தியா மற்றும் பிற நாடுகளிலும் கண்டறியும் நோக்கில், தமிழ்நாடு தொல்லியல் துறை கீழ்க்கண்ட ஆய்வுகளை மேற்கொண்டது.

**1. பாலூர் (ஒடிசா)**

- தமிழ்நாடு மாநிலத் தொல்லியல் துறையும், ஒடிசாவின் **கடல்சார் மற்றும் தென்கிழக்கு ஆசிய ஆய்வுகளுக்கான நிறுவனமும்** இணைந்து **2024**-ஆம் ஆண்டு ஒடிசாவின் பாலூரில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டன.

- இதன் முக்கிய நோக்கம்:
  - தமிழ்நாடு மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு இடையிலான பண்டைய தொடர்புகளைக் கண்டறிவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- **கண்டுபிடிப்புகள்:**
  - 600-க்கும் மேற்பட்ட கலைப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

**2. வெங்கி மற்றும் மஸ்கி**

- **ஆந்திரப் பிரதேசம்** – வெங்கி
- **கர்நாடகா** – மஸ்கி
- இவ்விரு இடங்களிலும் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில் **கூட்டு ஆய்வுகள்** மேற்கொள்ளப்பட்டன.

**3. முசிறி பட்டினம்**

- இடைக்காலம் வரை **கேரளா**, தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது.
- சங்க இலக்கியங்களும், சங்க காலத்திற்குப் பிந்தைய இலக்கியங்களும் தமிழ்நாடு–கேரளா இடையிலான **நெருங்கிய கலாச்சாரத் தொடர்புகளை** தெளிவாக எடுத்துரைக்கின்றன.
- தொல்லியல் **துறையின்** ஆய்வுகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், **உலகத் தரம் வாய்ந்த இந்திய மற்றும் சர்வதேச கல்வி நிறுவனங்களுடன்** இணைந்து பல்வேறு கூட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சர்வதேச மற்றும் இந்திய கல்வி நிறுவனங்களுடனான கூட்டு ஆய்வுகள்**

| வ. எண் | ஆய்வின் வகை (Studies) | கல்வி நிறுவனங்கள் (Institutions) |
|---|---|---|
| 1 | மரபணு ஆய்வு (Genetic Analysis) | மதுரை காமராசர் பல்கலைக்கழகம், ஹார்வர்ட் மருத்துவப் பள்ளி |
| 2 | தொல் தாவரவியல் (Palaeobotany) | டெக்கான் கல்லூரி, லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி |
| 3 | கதிரியக்கக் காலக்கணிப்பு (Cosmogenic & Luminescence) | IUAC, புது தில்லி; ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் |
| 4 | கார்பன் காலக்கணிப்பு (AMS Radiocarbon) | IUAC, புது தில்லி; பீட்டா அனலிட்டிக் (அமெரிக்கா), வியன்னா பல்கலைக்கழகம் |
| 5 | உலோகவியல் மற்றும் தொழில்நுட்பம் (Archaeometallurgy) | ஐ.ஐ.டி. காந்திநகர்; ஃபீல்டு மியூசியம் (சிகாகோ); ஹாங்கி பல்கலைக்கழகம் (தென் கொரியா) |
| 6 | நுண்உயிர் மற்றும் சிப்பி ஆய்வுகள் (Diatom & Shell Studies) | அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம்; விஸ்கான்சின்–மேடிசன் பல்கலைக்கழகம் |
| 7 | மானுடவியல் மற்றும் விலங்கியல் (Physical Anthropology & Archaeo-Zoology) | டெக்கான் கல்லூரி; கேரளப் பல்கலைக்கழகம் |

| | | |
|---|---|---|
| **8** | **மட்பாண்ட ஆய்வுகள் (Ceramic Studies)** | வி.ஐ.டி. வேலூர்; எம்.எஸ். பல்கலைக்கழகம்; சிகாகோ பல்கலைக்கழகம் |
| **9** | **ஐசோடோப்பு பகுப்பாய்வு (Isotopic Analysis)** | IUAC, புது தில்லி |

- தொல்லியல் ஆய்வுகள் மற்றும் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்ட கலைப்பொருட்கள், **ஆராய்ச்சியாளர்கள்** மற்றும் **பொதுமக்களின்** பார்வைக்காக தமிழகம் முழுவதும் அமைந்துள்ள **15 தொல்லியல் அருங்காட்சியகங்களில்** பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

**தமிழகத்திலுள்ள தொல்லியல் அருங்காட்சியகங்கள்**

| **வ. எண்** | **அருங்காட்சியகம்** | **இடம் / மாவட்டம்** |
|---|---|---|
| **1** | வரலாற்றுக்கு முந்தைய கால அருங்காட்சியகம் | பூண்டி / திருவள்ளூர் |
| **2** | ஆற்காடு அருங்காட்சியகம் | ஆற்காடு / ராணிப்பேட்டை |
| **3** | நடுகல் அருங்காட்சியகம் | தர்மபுரி |
| **4** | திருக்கோவிலூர் அருங்காட்சியகம் | திருக்கோவிலூர் / கள்ளக்குறிச்சி |
| **5** | கோயம்புத்தூர் அருங்காட்சியகம் | கோயம்புத்தூர் |
| **6** | சேரர் அருங்காட்சியகம் | கரூர் |
| **7** | மராட்டியர் அருங்காட்சியகம் | தஞ்சாவூர் |
| **8** | ராஜராஜன் அருங்காட்சியகம் | தஞ்சாவூர் |
| **9** | கங்கைகொண்டசோழபுரம் அருங்காட்சியகம் | கங்கைகொண்டசோழபுரம் / அரியலூர் |
| **10** | கடல்சார் தொல்லியல் அருங்காட்சியகம் | பூம்புகார் / மயிலாடுதுறை |
| **11** | டேனிஷ் கோட்டை அருங்காட்சியகம் | தரங்கம்பாடி / மயிலாடுதுறை |
| **12** | ராமலிங்க விலாசம் அருங்காட்சியகம் | ராமநாதபுரம் |
| **13** | திருமலை நாயக்கர் மஹால் அருங்காட்சியகம் | மதுரை |
| **14** | நாட்டுப்புறவியல் அருங்காட்சியகம் | குற்றாலம் / தென்காசி |
| **15** | கீழடி அருங்காட்சியகம் | சிவகங்கை |

**புதிய அருங்காட்சியகத் திட்டங்கள்**

**1. கீழடி அருங்காட்சியகம் (சிவகங்கை)**

- **18.42 கோடி ரூபாய்** செலவில், **கொந்தகையில்** சுமார் **31,000 சதுர அடி** பரப்பளவில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.
- **05.03.2023** அன்று திறந்து வைக்கப்பட்டது.

**2. கீழடி திறந்தவெளி அருங்காட்சியகம்**

- **4.48 ஏக்கர்** பரப்பளவில்,
- **17.10 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் திறந்தவெளி அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

**3. பொருநை அருங்காட்சியகம் (திருநெல்வேலி)**

- **ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை** அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்படுகிறது.
- **2022**-ஆம் ஆண்டு,
    - **33.02 கோடி ரூபாய்** மதிப்பீட்டில்,
    - நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டது.

**4. கங்கைகொண்டசோழபுரம் அருங்காட்சியகம் (அரியலூர்)**

- **ராஜேந்திர சோழனின்** கடல் கடந்த வர்த்தகம் மற்றும் தூதரக உறவுகளை எடுத்துக்காட்டும் வகையில் அமைக்கப்படுகிறது.
- **4.14 ஹெக்டேர்** பரப்பளவில், **22.10 கோடி ரூபாய்** செலவில் அருங்காட்சியகம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**5. நாவாய் அருங்காட்சியகம் (ராமநாதபுரம்)**

- **அழகன்குளம்** அகழ்வாராய்ச்சியில் கிடைத்த பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- **மண்டபம்** கிராமத்தில், சுமார் **20,000 சதுர அடி** பரப்பளவில் அமைக்கப்பட உள்ளது.

**6. நொய்யல் அருங்காட்சியகம் (ஈரோடு)**

- **20 கோடி ரூபாய்** மதிப்பீட்டில், அருங்காட்சியகத்திற்கான **வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்** பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்**

**வரலாறு**

- **1974**-ஆம் ஆண்டு **"கல்வெட்டியல் நிறுவனம்" (Institute of Epigraphy)** என்ற பெயரில் தொடங்கப்பட்டது.
- இந்நிறுவனம் தொல்லியல் துறையின் தலைமையகத்தில் **கல்வி மற்றும் பயிற்சி மையமாக** செயல்பட்டு வந்தது.

**பெயர் மாற்றம்**

- **2021–2022**-ஆம் ஆண்டில்,
- **"தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம்" (Tamil Nadu Institute of Archaeology and Museology)** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

# UNIT VI

**2025–2026 ஆம் நிதியாண்டில் தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ள இடங்கள்**

| வ. எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | கீழடி | சிவகங்கை |
| 2 | பட்டணமருதூர் | தூத்துக்குடி |
| 3 | கரிவலம்வந்தநல்லூர் | தென்காசி |
| 4 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் |
| 5 | மணிக்கொல்லை | கடலூர் |
| 6 | ஆதிச்சனூர் | விழுப்புரம் |
| 7 | வெள்ளளூர் | கோயம்புத்தூர் |
| 8 | தெலுங்கனூர் | சேலம் |

**விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கு**
**ஆங்கிலேயருக்கு எதிரான தொடக்ககாலப் போராட்டங்கள்**

**முக்கிய பிரிவுகள்**
I. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஆரம்பகால எதிர்ப்பு
II. ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் தெற்குப் பாளையக்காரர்களின் தொடக்ககால எதிர்ப்பு
III. தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

**I. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான ஆரம்பகால எதிர்ப்பு காலக்கோடு**

| ஆண்டு | வரலாற்று நிகழ்வு |
|---|---|
| 1746–1748 | முதலாம் கர்நாடகப் போர் |
| 1749–1754 | இரண்டாம் கர்நாடகப் போர் |
| 1757 | பிளாசிப் போர்: ஆங்கிலேயர்கள் சிராஜ்-உத்-தெளலாவைத் தோற்கடித்தனர் |
| 1758–1763 | மூன்றாம் கர்நாடகப் போர் |
| 1760 | வந்தவாசிப் போர்: ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களைத் தோற்கடித்தனர் |
| 1761 | மூன்றாம் பானிபட் போர் |
| 1764 | பக்சார் போர்: ஆங்கிலேயர்கள் மீர் காசிமைத் தோற்கடித்தனர் |
| 1765 | ஆங்கிலேயர்களுக்கு வங்காளம், பீகார் மற்றும் ஒரிசாவில் திவானி உரிமை (வரி வசூலிக்கும் உரிமை) கிடைத்தது |